# அறிவித்தல்

B

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் "மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தம்)" எனும் சட்டமூலத்திற்கெதிராக ஆற்றுப்படுத்தப்பட்ட மனு சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

மனுதாரர் இச்சட்டமூலம் தொடர்பான மனுவினை தொடர்ந்து முன்னெடுக்க விரும்பவில்லையென நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இச் சட்டமூலம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு முரணானது அல்ல என்றும் அரசியலமைப்பின் 12(4) அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சமத்துவத்திற்கான உரிமை ஏற்பாடுகளுக்கு ஆதரவளிக்கின்றதெனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.